உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௬] பிரமாதி ஸ்ரீ வைகாசி மீ [பகுதி-எ.
Vol. 36. May—June 1939. No. 7.

வான்மீகரும் தமிழும்.

[உ௩௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

VI. மதுரம் வாக்கியம்—தமிழ்ப்பாஷை.

இனி, அநுமான் சீதையிடம் வெகுவிதமாக உலகவழக்கான தமிழ்நடையிற் பேசியவற்றை விரித்துச்சொல்லத் தொடங்கி, 31-ஆம் சர்க்கத்தின் முதல் சுலோகத்தில், "அநுமான் பலபடியாலும் ஆலோசித்துக்கொண்டு, சீதைக்குக் காதுகேட்கும் தூரத்திலிருந்து, இனிச்சொல்லப்போகிறபடியே தமிழ்ப்பாஷையைப் பேசினான்" என்று வான்மீகிபகவான் பாயிரம் கூறியிருக்கிறார்.

அந்தச் சுலோகம் வருமாறு:—

5ஏவம் 2பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா 1மஹாகபி: ।
4ஸம்ஶ்ரவே 6மதுரம் வாக்யம் 3வைதேஹ்யா 7வ்யாஜஹார 8ஹ ॥

இதன் பொருள்:—

1 மஹாகபி:—மஹானுபாவனான ஹனுமான்

2 பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா—வெகுவிதமான ஆலோசனையைச்செய்து

3 வைதேஹ்யா:—ஸீதாதேவிக்கு

4 ஸம்ஶ்ரவே—காதுகேட்கும் தூரத்தில் (இருந்து)

5 யதா—பின்சொல்லப்போகிற பிரகாரம்

6 மதுரம் வாக்யம்—மதுரசப்தபர்யாயமான தமிழ் என்னும் பெயருடைய பாஷையை

7 வ்யாஜஹார—வழங்கினன்

8 ஹ—ஆச்சர்யம். என்பது.

இங்கும் மதுரம் வாக்யம் என்பது, ஏகவசனத்தால் ரஸஜநகமான (இனிமைபயப்பதான) தமிழ்ப்பாஷை யென்றே பொருள் கொள்ளக்கிடக்கிறது. அப்படியிருந்தும், இந்தச் சுலோகத்திலுள்ள ‘மதுரம் வாக்யம்’ என்பதற்குமட்டும் ரஸஜநகமானவாக்யம் என்று வியாக்கியானம் எழுதப்பட்டிருக்கிறது. இதன் முற்பட்ட சுலோகத்திற் சொல்லப்பட்ட மதுரசப்தத்துக்கும் இவ்வாறே ரஸஜநகம் (இனிமைபயப்பது) என்று வியாக்கியானம் எழுதாமல் சும்மா விடப்பட்டிருப்பதற்குக் காரணமென்ன?

மதுரசப்தத்துக்கு ரஸஜநகம் என்னும் பொருள் வெளிப்படை என்றெண்ணி உரையெழுதாமல் விடப்பட்டிருக்கலாமென்றால், அவ்வாறே பிந்திய இந்தச்சுலோகத்திலுள்ள மதுரசப்தத்துக்கும் உரை யெழுதாமல் விடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் (பிரதமாதிக்கரணமாக) முந்தியதை விட்டுவிட்டுப் பிந்திய சுலோகத்திலுள்ள மதுரசப்தத்துக்குமட்டும் ரஸஜநகம் என்று உரை எழுதப்பட்டிருப்பதற்குத் தக்ககாரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் யாதாயிருக்குமென்று இங்கு ஆராய்வோம்.

முந்திய சுலோகத்திலுள்ள மதுரசப்தத்துக்கும் ரஸஜநகம் என்று உரையெழுதினால், கூறியதுகூறல் என்னும் புனருக்தி தோஷம் ஸம்பவிக்கும்; ஆதலால் அதற்கு ரஸஜநகம் என்று உரையெழுதலாகாது; வேறுபொருள் இருக்கவேண்டும் என்று எண்ணி உரை யெழுதாமல் விடப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது,

அவ்வாறு உரையெழுதாமல் விடப்பட்டபொருள் யாதாயிருக்கவேண்டும்? அது அநுமான் சீதையிடம் பேசவேண்டி முன்பே நிச்சயித்துக்கொண்ட பாஷையின் பெயராயிருக்கவேண்டும்; அந்தப் பாஷையையே வால்மீகிபகவான் தம் வாயாலும் வெளிப்படச் சொல்லித்தீரவேண்டும். அவ்வாறு சொல்லியிருப்பதாக வேறொருவகையாலும் புலப்படாமையால், முந்தியசுலோகத்தில் சொல்லிய மதுரம்வாக்கியம் என்பது அந்தப்பாஷையின் பெயராயிருக்கலாமென நினைந்து, அந்தப்பாஷை இன்னதென்று தோன்றாமையால் அதற்கு உரையெழுதாமல் விடப்பட்டிருக்கவேண்டும்.

இவ்வாறாக முந்திய சுலோகம் அநுமான் சீதையிடம் பேசக்கருதிய பிரகாரங்களைத் தொகுத்துச்சுட்டுதலால் அதில் இன்னபாஷையில் பேசினான் என்பதைச் சொல்லி, பின் வகுத்துக் காட்டத்தொடங்கிய அடுத்த சுலோகத்தில் ரஸஜ்ஞகமான வாக்கியத்தைப் பேசினான் என்று பொருள்கொள்வது புனருக்தமும் வியர்த்தமுமாகாமல் சமர்த்தமாகிறது: என்று வியாக்கியாதாகருதி, முந்தியசுலோகத்தில் மதுரம் என்ற சொல்லுக்குப் பொருள் எழுதாமல்விட்டுவிட்டுப் பிந்திய சுலோகத்திலுள்ள மதுரம் என்பதற்கு மட்டும் உரையெழுதியிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

இப்படியாகத் தமிழ்ப்பயிற்சியில்லாதார் இடர்ப்படுவர் என நினைந்தே வால்மீகிபகவான் மதுரசப்தப்பிரயோகம் இருமுறை செய்துபோந்தார். இருமுறை சொல்லாது ஒருமுறையே மதுரமான வாக்கியத்தைப் பேசினான் என்று சொல்லியொழிந்தால், அதற்குத் தமிழில் பேசினான் என்று பொருள் கொள்ளாமலே, இனிமையுள்ள வாக்கியங்களைச் சொன்னான் என்று பொருள்கொண்டொழிவர்கள். அங்ஙனம் ஒழியாது தமிழ்ப்பேச்சைப் பேசினான் என்று ஓரிடத்தேனும் தமிழும் உணர்ந்தவர்களுக்குப் பொருள் தெரியும்படி சொல்லவேண்டும்; அல்லாக்கால் விளங்கவைத்தல் என்னும் குணம் ஒழியும்: என்று எண்ணி, தமிழுமுணர்ந்த வால்மீகிபகவான் தமிழ் என்னும் சொல்லின் பிரதிபதமான மதுரசப்தத்தை இருமுறை சொல்லி நியமித்திருக்கலாமென்று தோன்றுகிறது.

வக்தாவுக்கு இவ்வர்த்தத்தில் தாத்பர்யமில்லையாயின், "ஸவி தய்யமம்ருதம் ஜமாஷவாக்யம்" என்றதை "ஸவிதய்யமம்ருதம் ஜமாஷவாக்யம்" என்றும், "ஸம்ஸ்வெ யயாயம்வாக்யம்" என்றதை "ஸம்ஸ்வெ வாக்யமம்ருதம்" என்றும் சொல்லி அம்ருத சப்தத்தால் ரஸஜநகம் என்னும் பொருள் மயங்காமற் புலப்படச் செய்திருப்பர். அங்ஙனமின்மையால் இரண்டிடத்தும் மதுரம் என்பதற்குத் தமிழே தாத்பர்யப்பொருளாகவும் தோன்றுகிறது.

இங்ஙனமன்றி, 'இரண்டிடத்தும் மதுரம் என்பதற்கு ரஸ ஜநகம் என்றே பொருள்கொண்டு அதனை நியமித்திருப்பதாகச் சொல்லில் புனருக்தமாகாது' என்பார் உளராயின், மதுரம்வாக்கியம் என்ற ஏகவசனம் இங்குச் சொல்லவேண்டிய பாஷையின் ஸங்கியை யாகிய முக்கியார்த்தத்தைவிட்டு வாக்கியஸமூஹ ஜாதிசங்கியை யாகிய லக்ஷ்யார்த்தத்தைச் சொல்வது கௌணமாகும். அன்றியும், அந்த வாக்கியஸமூஹம் இன்னபாஷையென்பதும் தோன்றாதாகும். இன்ன பாஷையென்று தோன்றாத பாஷாஸாமாந்யத்தை ரஸஜநகம் என்று குணம்பற்றி விசேஷித்தால் அந்த விசேஷணம் வியாவர்த்தகமாகாது (பிறவற்றினின்றும் பிரித்துக்காட்டமாட்டாது) வியர்த்தவிசேஷணமாகும் (-பயனில்லாத அடைமொழியாகும்). அப்படியாகாமைக்கு வாக்கியசப்தார்த்தமான பாஷாஸாமான்யத்துக்கு மதுரசப்தம் பாஷாவிசேஷநாமமாய் விசேஷணமானல், சாமான்ய விசேஷங்களுக்கு அபேதாந்வயமுடைமையால் வ்யாவர்த்தகமாய் மதுரேதரமான ஸம்ஸ்கிருதமாநுஷபாஷையையும், ஸம்ஸ்கிருதபாஷையையும் விலக்கி, மதுரம் (தமிழ்) என்னும் பாஷையைப் பேசினன் என்று சாதுவாகும்.

ஆகவே, இரண்டுசுலோகங்களினுமுள்ள மதுரசப்தங்களுக்கும் தமிழ் என்றே பொருள்கொண்டால் அனுமான் உத்தேசித்தபடியே தமிழில் பேசினன்; வேறு பாஷையில் (ஸம்ஸ்கிருதமாநுஷ பாஷையிலாவது, ஸம்ஸ்கிருதபாஷையிலாவது) பேசவில்லை; என்று அந்வயத்தாலும் வ்யதிரேகத்தாலும் அர்த்தஸித்தியுண்டாய் அனுமான் ஸங்கற்பித்துக்கொண்டபடியே அர்த்தவத்தான மாநுஷ பாஷையில் பேசினன்: என்னும் பொருள் வலியுறுத்தப்பட்டதாய்,

கௌணவிருத்தியும் வேண்டாது, புனருக்தமுமாகாது, சாதுவாகு மென்று தோன்றுகிறது.

மதுரசப்தபர்யாயமான தமிழ் என்னும் பாஷாநாமத்தின் அந்வர்த்தசக்தியால் (காரணவிடுகுறியாற்றலால்) ரஸஜநகம் என்னும் அர்த்தமும் தானே சித்திக்கிறது.

தமிழ் ரஸஜநகம் (இனிமைபயப்பது) என்பதை,

"கூடலின் ஆய்ந்த ஒண் தீம்தமிழ்"[1]

என்று மாணிக்கவாசகரும்,

"ஊறும் இன்பத்தமிழால் உயர்ந்தார்"[2]
"தேனேரார்தமிழ்விரகன மொழிகள்"[3]
"ஞானசம்பந்தன் இன்தமிழ்"[4]
"ஞானசம்பந்தன் சொன்ன இன்தமிழ்"[5]

என்று திருஞானசம்பந்தரும்,

"இன்தமிழ் மாலைகள்"[6] என்று விண்டுசித்தரும்,

"விருப்புடை இன்தமிழ் மாலை"[7] என்று கோதைப்பிராட்டியாரும்,

"சொல்லில் இன்தமிழ் மாலை"[8] "சொல்லிய இன்தமிழ்மாலை"[9]
"நல்லியல் இன்தமிழ் மாலை"[10] என்று குலசேகராழ்வாரும்,

"கலிகன்றி இன்தமிழால் உரைத்த"[11]
"இன்தமிழ் நன்மணிக்கோவை"[12]
"தேனார் இன்சொல் தமிழ்மாலை"[13]
"இருநீர் இன்தமிழ் இன்னிசைமாலை"[14]
"நெடுமாலை இன்தமிழால் நினைந்த"[15]

என்று திருமங்கையாழ்வாரும்

---

[1] திருக்கோவையார்—20. [2] தேவாரம் கோயில்பதிகம்—2. பா. 11. [3] ஷை திருக்கழுமலப்பதிகம்–3. பா. 11. [4] ஷை திருக்கழுமலப்பதிகம்–16. பா. 12. [5] ஷை திருக்கடைமுடிப்பதிகம், பா. 11. [6] பெரியாழ்வார் திருமொழி–3–2–10. [7] நாச்சியார் திருமொழி–1. பா. 10. [8] பெருமாள் திருமொழி–2. பா. 10. [9] ஷை 6–10. [10] ஷை 10–10. [11] பெரியதிருமொழி 2–1–10. [12] ஷை 7-8-10. [13] ஷை 8–8–10. [14] ஷை 8–9–10. [15] ஷை 9–10–10.

தீம்தமிழ், இன்பத்தமிழ், தேனேரார்தமிழ், இன்தமிழ்: என்பவற்ருல், தமிழ் ரஸஜநகமென்னும் பொருள்தோன்றத் தண்ணீர் என்பது போலும் ஸ்வபாவவிசேஷணத்தால் விசேஷித்து வழங்குதலாலும் அறியலாம்.

ரஸஜநகமாவது: வடமொழிபோலப் பருஷாக்ஷரங்கள் (வெட்டெனவான எழுத்தொலிகள்) மிகுந்தில்லாமல் மதுராக்ஷரங்களே (மெத்தெனவான எழுத்தொலிகளே) மிகுந்துள்ள பாஷையாயிருப்பது; அதனுல் தமிழே மதுரம் (ரஸஜநகம்) என்பதாம்.

இதனை, "கூஜந்தம் ராமராமேதி மதுரம் மதுராக்ஷரம்" என்பதனுல், காகுத்ஸ்யசப்தம்போல் வெட்டெனவில்லாமல், மெத்தெனவுள்ள தமிழெழுத்தொலிபோலும் மதுராக்ஷரமுடையதாய் மதுரமாயுள்ளது ராமசப்தம் என்றதனு லறியலாம்.

மதுரசப்தம் தமிழ் என்னும் பொருள்பயப்பது எங்ஙனமெனில்? முன்பு அனுமான் சீதையிடம் இன்னபாஷையில் இன்னபடி பேசலாம் என்று ஆலோசித்து நிச்சயித்தவிடத்தில் "அவஸ்யமேவ வக்தவ்யம் மாநுஷம் வாக்யம் அர்த்தவத்" என்று சொல்லப்பட்ட "அர்த்தவத் மாநுஷவாக்கியம்" என்றது பொருளினிதுபுலப்படும்படிம்பசும் முக்கியார்த்தமுடைய (வெளிப்படைப் பொருளுள்ள) உலகநடையான தமிழ்ப்பாஷையென்று துணியப்பட்டமையால், அவ்வாறே அவன் பேசத்தொடங்கும் இடத்தும் அப்படியே "அவிதம் மதுரம் ஜகாத" என்றதனுல் செம்பொருளுடைய உலகவழக்கான தமிழ்நடையில் பேசினுன்: என்று பொருள்கொள்ளவேண்டுமென்பது பிரகரணத்தாலும், ஔசித்தியத்தாலும் சித்திக்கிறது (—இடத்தாலும், பொருந்துமாற்ருலும் பெறப்படுகிறது).

இனி அர்த்தத்தாலும் மதுரமும் தமிழும் ஒன்றென்று சித்திக்குமாறு காட்டுதும்.

மதுரம் என்பதும் இனிது என்பதும் ஒருபொருட்சொற்கள் என்பதைச் சாமானியரும் அறிவர். அந்த இனிது என்பதும் தமிழ் என்பதும் ஒருபொருட்சொற்கள் எனத் தமிழ்கற்ருரெல்லோரும் அறிவர்.

இனிது என்பதும் தமிழ் என்பதும் ஒருபொருளுடையவாகவே, இனிது என்பதனோடு ஒருபொருளுடைய மதுரம் என்பதும் தமிழ் என்பதும் ஒருபொருளுடையவாமென்று அறியத்தக்கதே.

தமிழ் என்ற சொல் இனிது என்பதன் பரியாயமாமாறு எங்ஙனம்? எனில் "தமிழெனப் தினிமை நீர்மை" என்ற நிகண்டினாலும், கம்பராமாயணம் பம்பைப்படலத்தில் "வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" என்பதற்கு 'வண்டுகள் இனிய கானத்தைப் பாடுதற்கு இடமான தாமரைமலர்' என்று பொருள்படுதலாலும், சிந்தாமணியில், 'தமிழ்தழிய சாயலவர்' (2026) என்பதற்கு, 'இனிமைதழுவிய சாயலையுடையவர்' என்று நச்சினார்க்கினியர் பொருள்கூறதலாலும் அறியலாம்.

இங்கு இனிமையையுணர்த்தும் தமிழ் என்னும் குணப் பண்புப் பெயர் அவ்வினிமையையுடைய பாஷைக்குப் பெயராயிற்று. இது நீலம் என்னும் நிறப்பண்புப்பெயர் அந்நீலநிறத்தையுடைய மலரையுணர்த்திப் பொருட்பெயரானாற்போலக் கொள்ளத் தக்கது.

இதுகாறுங் கூறியவாற்றால், அநுமான் சீதையிடம் பேசக் கருதி ஆலோசித்து நிச்சயிக்கப்பட்டதும், சீதையிடம் பேசியதும் ஆகிய பாஷை, அர்த்தவத் மாநுஷபாஷையென்றும் அவிதயமதுர பாஷையென்றும் சொல்லப்பட்ட முக்கியார்த்தவாசகங்களையுடைய வெளிப்படையான தமிழ்ப்பாஷையென்று நிரூபிக்கலாயிற்று.

மாநுஷபாஷையைப்பற்றி உரைகாரர் குறிப்பிடுவது,(தற்கால நிலையை நினைந்து) சீதை தெரிந்துகொள்வதற்குரிய கோசலதேசத்துள்ளோரால் பேசப்படும் பாஷையாயிருக்கவேண்டுமென்பது.

மாநுஷபாஷை யென்பதற்கு மனிதர்க்கு உரிய பாஷை என்பதே பொருள். இதில் உரியோர் மனிதர். உரிமைப்பொருள் பாஷை. மனிதர்க்கும் பாஷைக்கும் உள்ள சம்பந்தம்—வினைமுதலும்தொழிற் பண்புமாகிய சம்பந்தம். இந்தச் சம்பந்தத்தைத் தமிழர் தற்கிழமை யென்பர். இதற்கு உதாரணம்: சம்பந்தரது தமிழ் என்பதுபோலுள்ளவை. தமிழ்ப்பாஷை இங்கு மாநுஷத்தன்மையை நிரூபக தர்மமாகக்கொண்டு மாநுஷபாஷையென்று பெயரிடப்பட்டிருப்பதால் அது மானிடராயுள்ளோரெல்லோருக்கும் உரியதென்றே பொருள்படும்,

இப்பொருள் கொள்ளாது கோசலதேசத்துள்ள மானிடரால் பேசத்தக்க பாஷை என்று பொருள்சொல்வதானால், சப்தசக்தியை சங்கோசம் செய்யவேண்டியிருக்கிறது. அனுமான் பேச்சில் இப்படியான தோஷம் இருக்கக்கூடாது. கோசலதேசத்து மாநுஷ பாஷையென்பதே தாத்பர்யமானால் அதை "மாநுஷீமிஹஸம்ஸ்க்ருதாம்" என்னாமல் "கௌசலீமிஹ ஸம்ஸ்க்ருதாம்" என்றும், "மாநுஷம் வாக்யம் அர்த்தவத்" என்னாமல் "கௌஸலம் வாக்யமுதீரயேத்" என்றும் முன்னம் அனுமான் சிந்தனைசெய்யுமிடத்தே தெளிவு பெறச் சொல்லியிருக்கக்கூடும். அவ்வாறு சொல்லாமையாலும், மதுரம் என்ற பெயர் தமிழையொழிய வேறு எதேனும் ஒரு பாஷைக்குரிய பெயராகக் காணப்படாமையாலும் கோசலதேசத்து மாநுஷ பாஷை யென்னும் பொருள் பொருந்தாதிருக்கிறது.

அப்பொருளும் பொருந்துமாறு இராமாயணகாலத்தில் கோசலதேசத்துள்ளோரும் தமிழராயிருந்தார்கள்: என்று பொருள் கொள்வதேசிறந்ததாம். இதற்குக் கோசலதேசத்திலிருந்து இலங்கையளவும் உள்ள இராமாயணசரித்திர சம்பாஷணங்கள் தடையின்றி நடந்தேறிவந்திருப்பது சான்றாகும்.

அக்காலத்தில் கோசலதேசத்தார்பாஷை தமிழின் வேறாயிருந்ததென்றால், அது பிரமாணசித்தமாய் இன்னபாஷை என வெளிப்பட்டிருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையாலும், ராமாயணகாலத்தில் இருந்த அகத்தியனார் முதலியோர் சங்கமிருந்து தமிழாராய்ந்தமையாலும், தமிழ்ப்பாஷை மானிடர்க்கு உரியதாயிருந்ததென்று தெரிந்தமையாலும், தமிழ் மாநுஷபாஷையென்று சொல்லத்தக்கதாயிருந்ததென்று சித்திக்கிறது.

தமிழ் மாநுஷபாஷையென்று பொதுப்படக் கூறப்பட்டமையால், அக்காலத்தில் மானிடர்வாழுமிடமெங்கும் தேசபாஷையாகத் தமிழ்மொழி நடைபெற்றிருந்ததென்று அறியத்தக்கதாயிற்று.

இம்முடிபிற்கு உதவியான பிறசான்றுகளும் உள்ளன. அவையும் தொடர்புடைமையால் இனி ஆராயத்தகும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

உ

அறுபதினாயிரம்.

பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள்.

[உ௭0-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

6. வில்லைக்கொணர்ந்த வீரர்.

இராமனும் லக்ஷ்மணனும் விசுவாமித்திரமுனிவனோடு மிதிலைக்குச் செல்லுகிறார்கள். அந்நகரிலே வீதிவழியாய்ச் செல்லும்போது இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல்கொள்கிறார்கள். இராமன் விசுவாமித்திரனோடு சென்று ஜனகனை அடைகிறான். அப்பொழுது ஜனகன் தன்னிடமுள்ள வில்லைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறான். விசுவாமித்திரன் 'இராமனுக்கு அந்த வில்லைக் காட்டு' என்று சொல்லுகிறான். 'தெய்வத்தன்மை பொருந்தியதும், வாசனைத்திரவியங்களாலும் மாலைகளாலும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டதுமான அந்த வில்லைக் கொண்டுவாருங்கள்' என்று ஜனகன் மந்திரிகளுக்குக் கட்டளையிடுகிறான். ஜனகனால் ஏவப்பட்ட மந்திரிகள் நகரத்துள்ளே சென்று, அந்த வில் முன்னேவர அதன்பின் வருகிறார்கள். மிக்க தேகபலமுள்ள ஐயாயிரம் ஆட்கள்* அதை வைத்திருக்கும் பெட்டியை மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்தப் பெட்டி எட்டுச்சக்கரங்கள் உடையது; இரும்பினால் செய்யப்பட்டது. பிறகு ஜனகன் அந்த வில்லின் சிறப்பைக்கூறி இதைத் தேவர்கள் அசுரர்கள் இராக்கதர்கள் ஆகிய ஒருவராலும் வளைக்கமுடியவில்லை. அப்படியிருக்கும்போது மனிதர்கள் எவ்வண்ணம் இதை அசைக்கவாவது, நிறுத்தவாவது, தாங்கவாவது, வளைக்கவாவது நாணேற்றவாவது கூடும்? என்கிறார். விசுவாமித்திரர் இராமனைப் பார்த்துக் 'குழந்தாய், ராம! வில்லைப் பார்' என்கிறார். பெட்டியைத்திறந்து இராமன் வில்லைப் பார்க்கிறான்.

---

* ந்ருணாம் ஶதாநி பஞ்சாஶத் வ்யாயதாநாம் மஹாத்மநாம் ।
மஞ்ஜூஷாம் அஷ்டசக்ராம் தாம் ஸமூஹுஸ்தே கதஞ்சந ॥
[பால. 67—4].

இந்தச் சிறந்த வில்லை என் கையால்—தொடலாமா? எடுத்து நாணேற்றிப் பார்க்கலாமா? என்கிறான். சரி என்கிறார்கள். இராமன் விளையாட்டாக அதை எடுக்கிறான், விளையாட்டாக நாணேற்றுகிறான். நாணை இழுக்கும்போது வில் ஒடிந்துபோகிறது: அதனால் பேரொலி உண்டாகிறது. பிறகு விவாகம் நடைபெறுகிறது. இது வால்மீகிராமாயணத்திலுள்ள கதை.

கம்பராமாயணத்தில் கார்முகப்படலத்திலே இக்கதை சொல்லப்படுகிறது. தன்னிடமுள்ள மாயவில்லையும் அதனால் தான் தோல்வியுற்று வருந்துவதையும் ஜனகன் தெரிவிக்கிறான். அழகு மிக்க இச்சிறுவன் இந்த வில்லை நாணேற்றுவானானால் என்னுடைய மகள் தவஞ்செய்தவள் ஆவாள். நானும் துக்கசாகரத்தினின்று வெளியேறுவேன் என்கிறான். பிறகு ஏவலாளரை ஏவுகிறான். நால்வர் ஓடுகிறார்கள். (ஏன் நாலுபேர்களோ தெரியவில்லை.) ஓடி, வில் வைத்திருந்த ஆயுதசாலையை அடைகிறார்கள். பிறகு வில் கொண்டுவரப்படுகிறது. 'மிக்க வலியையுடைய யானையைப்போன்ற மேனியை உடையவர்களும், மலைபோல் திரண்டனவாயும் மயிர் செறிந்தனவாயும் உள்ள தோள்களையுடையவர்களும், அளவிட இயலாத பலமுடையவர்களுமான அறுபதினாயிரம் பேர்கள் அந்த வில்லுக்கு அடியிலே இடையிடையே தூண்களை வைத்துத் தண்டுகளைக் கட்டித் தூக்கிக்கொண்டுவந்தார்கள்' என்கிறார்.

"உறுவலி யானையை ஒத்த மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதி னாயிரர் அளவில் ஆற்றலர்
தறிமடுத் திடையிடை தண்டிற் றூங்கினர்"

[பால-கார்முக-3]

அதைக்கண்ட மிதிலைநகரவாசிகள் பற்பலவாறு பேசிக்கொள்கிறார்கள். வில்லைச் சிலர் புகழ்கிறார்கள்; விதியைச் சிலர் பழிக்கிறார்கள்; அதைக் கன்னியாசுல்கமாக வைத்த ஜனகனைச் சிலர் பழிக்கிறார்கள்; மன்னர்கள் விதிர்விதிர்க்கிறார்கள். பிறகு சதானந்த முனிவன் 'இன்று இராமன் வில்லை நாணேற்றினால் சீதையின் அழகு பழுதாகாது' என்கிறார். அப்பொழுது விசுவாமித்திரன்

தன்னுடைய தலையை அசைத்து இராமனைப் பார்க்கிருர். ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இராமன் எழுந்திருந்து யாவரும் வியக்கும்படி நடந்துசென்று சீதையை மணம்சூட்ட எடுக்கும் பூமாலையை எடுப்பதுபோல அவ்வளவு சுலபமாக அவ்வளவு லாகவத்தோடும் உற்சாகத்தோடும் அதை எடுக்கிருன். அவன் கையால் எடுத்ததை ஜனங்கள் கண்டார்கள். அது ஒடிந்த ஓசையைக் கேட்டார்கள்; வேறென்றையும் அவர்கள் பார்க்கவில்லை: என்கிருர் கம்பர்.

இந்த இடத்திலேயும் வால்மீகி ஐயாயிரம் என்று குறிப்பிட்டிருக்க, கம்பர் அறுபதினுயிரமாக மாற்றிவிட்டாரே! சிலர் வால்மீகத்துக்கு ஏற்ப, அறு பதினுயிரர் என்று பிரித்து,—பாதியாக அற்ற பதினுயிரர், அதாவது—ஐயாயிரவர் என்று பொருள் சொல்லுகிருர்கள். கம்பருக்கு அறுபதினுயிரம் என்னும் தொகையிலுள்ள ஆசையைக் கண்டவர்கள் இவ்வாறு ஐயாயிரம் என்று பொருள் சொல்லுவதை ஒப்பமாட்டார்கள். ஆனல் கம்பருக்கு இந்தத் தொகையில் ஏன் இவ்வளவு ஆசை?

7. பகீரதன் தவம்.

சகரன் யாகம்செய்யும்பொருட்டுக் குதிரையை அனுப்பியதும்; அவனை வஞ்சித்து அவனுடைய யாகம் முற்றுப்பெருதிருக்கச்செய்யும்பொருட்டு இந்திரன் அந்தக் குதிரையைக் கபிலமுனிவன் தவம்செய்துகொண்டிருந்த இடத்துக் கொண்டுபோய் விட்டதும்; அதைச் சகரர்கள் தேடியதும்; அகப்படாததால் பூமியைத் துளைத்துத் தோண்டியதும்; கபிலமுனிவர்முன் அது நிற்கக் கண்டு அவரைத் தாக்கியதும்; அவருடைய சாபத்தால் அவர்கள் அனைவரும் நீருகியதும்: நம் நாட்டிலே யாவரும் அறிந்த கதை. இந்தக் கதை வால்மீகிராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் சொல்லப்படுகிறது.

குதிரையைத் தேடிப்போன தன் மைந்தர்கள் வாராததைக் கண்ட சகரன், தன்னுடைய பேரனை அம்சுமானை அழைத்து அவர்களைத் தேடச்சொல்லுகிருன். அவன் எங்கும் சென்று

கடைசியில் சாம்பற்குவியலாய் அவர்கள் கிடக்கக்கண்டு, அவர்களுக்குப் பிதிர்க்கடனியற்றுதற்கு நல்ல தீர்த்தம் தேடுகிறான்; அகப்படவில்லை. அவன் அப்படி அலையும்போது கருடன் வருகிறான்; 'சொர்க்கலோகத்திலுள்ள கங்கைநீரினால்மட்டுமே அவர்கள் நற்கதி அடையமுடியும்' என்கிறான். அம்சுமான் திரும்பப்போய்ப் பாட்டனாகிய சகரனிடம் தெரிவிக்கிறான். அவனும் வெகுவாக ஆலோசித்தும், யாதொரு உபாயமும் அவனுக்குப் புலப்படவில்லை. அதே சிந்தையாய் முப்பதினாயிரம் வருஷம்[1] ஆண்டு பிறகு சுவர்க்கலோகம்போய்ச் சேருகிறான் சகரன்.

அதன்பிறகு அம்சுமான் ஆளுகிறான். அம்சுமான் தன் மகனுக்குப் பட்டஞ்சூட்டிவைத்துவிட்டு, இமயமலைக்குப்போய் அங்கே முப்பத்தீராயிரம்[2] வருஷம் கடுந்தவம்புரிகிறான். இதுகூட இரண்டுமுப்பதாயிரம்வருஷம் என்று இருக்கலாமோ என்று தோன்றுகிறது. முதல் எழுத்து மாறியிருந்தால் அப்படிப் பொருள்கொள்ள இயலும். அவனுக்குப்பின் திலீபன் முப்பதினாயிரம்[3] வருஷம் ஆளுகிறான். அவன் யாகங்களைச் செய்கிறான். கங்கையைக்கொண்டுவரும் வழி தெரியாமல் கவலையால் நோயடைந்து, தன் மகனை பகீரதனுக்குப் பட்டாபிஷேகம்செய்துவைத்துவிட்டுப் பரலோகம் அடைகிறான். அவனும் சிலகாலம் ஆண்டு, பிறகு தன் மந்திரிமார்களிடம் இராச்சியத்தை ஒப்புவித்துத்

---

[1] த்ரிம்ஶத்வர்ஷஸஹஸ்ராணி ராஜ்யம் க்ருத்வா திவம் கத: ॥

[வாயு. 41—28.]

[2] ஹிமவச்சிகரே ரம்யே தபஸ்தேபே ஸுதாருணம் ।
த்வாத்ரிம்ஶச்ச ஸஹஸ்ராணி வர்ஷாணி ஸுமஹாயஶா: ॥

[வாயு. 42—4.]

[3] திலீபஸ்து மஹாதேஜா: யஜ்ஞைரிஷ்ட்வா மஹாவிஷ: ॥
த்ரிம்ஶத்வர்ஷஸஹஸ்ராணி ராஜா ராஜ்யமகாரயத் ॥

[வாயு. 42—8.]

தவம்புரிய இமயமலை செல்கிறான். அவ்விடத்திலே ஆயிர[1] வருஷ காலம் (அல்லது பல்லாயிரவருஷகாலம்) கடுமையாகத் தவம் செய்கிறான். பிறகு பிரமதேவர் வந்து காட்சியளிக்கிறார். பகீரதன் தன்னுடைய மனோரதத்தைத் தெரிவிக்கிறான். உடனே பிரம தேவர் உன் எண்ணம் நிறைவேறும்; கங்கை பூமிக்கு வருவாள்; ஆனால் ஈசுவரன் ஒருவனால்மட்டிலுமே அவளைத் தாங்கமுடியும் என்று சொல்லி மறைகிறார். பிறகு ஈசுவரனைக்குறித்து ஒரு வருஷம்[2] தவஞ்செய்கிறான் பகீரதன். சிவன் பிரசன்னமாகிப் பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்குகிறார். கங்கை வேகமாய் இறங்குகிறாள்; சிவனுடைய ஜடையினுள் அடங்கிவிடுகிறாள். அவள் வெளியில்வாராததைக் கண்ட பகீரதன் மீண்டும் தவம்புரி கிறான்.[3] இத்தனை வருஷமென்று குறிப்பிடவில்லை. பிறகு சிவனுடைய அநுக்கிரகத்தின்பேரில் கங்கை வெளியே தோன்றுகிறாள். பிறகு பகீரதன் பின்சென்ற கங்கை, பூமியில் வந்து சமுத்திரத்தில் புகுந்து, பாதாளலோகத்தை அடைந்து, நீற்றுக்குவியலின்மீது பெருகிச் சகரன்மைந்தரைச் சுவர்க்கத்துக்கு அனுப்பினாள். இது தான் வால்மீகிராமாயணக் கதை. இதன்படி பகீரதன் தவம்புரிந்த வருஷங்கள் இத்தனை என்று உறுதியாகச் சொல்லுவதற்கில்லை. ஓரிடத்தில் ஆயிரம் வருஷங்களும், மற்றோரிடத்தில் ஒரு வருஷ மும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வேறு இரண்டு இடங்களில் தொகை குறிப்பிடப்படவில்லை.

---

1 தஸ்ய வர்ஷஸஹஸ்ராணி கோரே தபஸி திஷ்டத: ।
அதீதானி மஹாபாஹோ தஸ்ய ராஜ்ஞோ மஹாத்மந: ॥
[வா. 42—13—14.]

2 அத ஸம்வத்ஸரே பூர்ணே ஸர்வலோகநமஸ்க்ருத: ।
உமாபதி: பசுபதீ ராஜாநமிதமப்ரவீத் ॥
[வா. 43—3.]

3 தாமேவ[illegible] தப: பரமமாஸ்தித: ।
[வா. 43—11.]

இனி, கம்பராமாயணத்தைப் பார்ப்போம். இந்த வரலாறு பாலகாண்டத்திலே அகலிகைப்படலத்துள்ளே கூறப்பட்டிருக்கிறது. சில பிரதிகளில் இந்தப் பகுதியைத் தனிப்படலமாக அமைத்து, கங்கைப்படலமென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கம்பராமாயணக்கதைப்படி, கபிலனுடைய தவமகிமையால் சகரபுத்திரர்கள் அறுபதினாயிரரும் சாம்பராய் அவிந்ததும், வேவுகாரர்கள் ஓடிப்போய் அந்தச் செய்தியைச் சகரனுக்குத் தெரிவிக்கிறார்கள். அதைக்கேட்டு மிகவருந்திய அரசன் தன்னுடைய மைந்தனுக்கு மைந்தனான அம்சுமானை அனுப்புகிறான். அவன் சென்று கபிலனை வணங்க, அவன் நடந்ததைச்சொல்லி, உன் குதிரையைக் கொண்டுபோ என்கிறான். குதிரை திரும்ப வந்ததும், சகரன் யாகத்தை முடிக்கிறான். பிறகு தன் மகனுக்கு இராச்சியத்தை விட்டுவிட்டுக் காலமாகிறான். பிறகு அம்சுமானுடைய வமிசத்தில் பகீரதன் தோன்றுகிறான்; அவன் தன்னுடைய முன்னோர்களுடைய செய்தியைக்குறித்து வஸிஷ்டமுனிவனை வினவ, அம்முனிவன் நிகழ்ந்தவற்றைச்சொல்லி, பிரமனைக் குறித்துத் தவம் செய் என்கிறான். அவனும் தன்னுடைய மந்திரியினிடம் அரசை ஒப்புவித்து, இமயமலையிலேபோய்த் தவஞ்செய்யத்தொடங்குகிறான். முதலிலே பதினாயிரவருஷகாலம் தவம்செய்கிறான். பிரமன் தோன்றுகிறான்.

> "ஞாலம் யாவையும் சுமந்திரன் தன்வயின் நல்கிக்
> கோலும் மாதவத் திமகிரி மருங்கினிற் குறுகிக்
> காலம் ஓர்பதி னாயிரம் அருந்தவம் கழிப்ப
> மூல தாமரை முழுமுதற் கிழவன் முந்தினனே"
>
> [பால-அகலிகை-47]

அவன்முன் தோன்றிய பிரமன் 'கங்காநதியால் உன்னுடைய முன்னோர்கள் நற்கதியடைவார்கள். கங்கையைத் தாங்குமாறு சிவபிரானைக் குறித்து நீ தவம்செய்' என்று சொல்லுகிறான். பகீரதனும் அப்படியே உமையொருபாகனாகிய சிவனைக் குறித்து முன் சொல்லப்பட்ட, அதாவது பதினாயிரம்வருஷம் தவம்செய்கிறான். செய்ததும், நெருப்புப்போன்ற நிறத்தையுடைய சிவபிரான்

அங்கேவந்து, 'உன்னுடைய கருத்தை நிறைவேற்றுவோம்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதன்மேல் பகீரதனும் கங்கையைத் தொழுது ஐயாயிரம் வருஷம் தவம் புரிந்தான்.

"மங்கை பாகனை நோக்கிமுன் மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் புரிதலும் தழல்நிறக் கடவுள்
அங்கு வந்துநின் கருத்தினை முடித்துமென் றகன்றான்
கங்கை யைத்தொழக் காலமைஐ யாயிரம் கழித்தான்"

[பால. அகலிகை. 50.]

அவன்முன் தோன்றிய கங்காதேவி 'என்னுடைய வேகத்தைச் சிவபிரானாலும் தாங்கமுடியாது; அவன் விளையாட்டாகச் சொன்னான்' என்று கூறலும், மீண்டும் சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்கிறான். கங்கை சொன்ன வார்த்தையைக் கேட்டுத் துன்பமடைந்த பகீரதன், ஊமத்தம்பூவும் எருக்கம்பூவும் வில்வமும் கொன்றைப்பூவும் கலந்து நிறைந்த, பொன்னிறமான, சடையையுடையவனும், குற்றமற்ற அக்கினியின் சுவாலையைப்போன்றவனுமான சிவபிரானை நினைத்து இரண்டாயிரத்தைந்நூறுவருஷம் தவம்புரிந்தான். அப்பொழுது பரமசிவன் அவன்முன்னே தோன்றி 'உன்னுடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்கவும், பகீரதன் அவனை வணங்கி, 'பெருமானே! கங்கையானவள் முழக்கத்துடன் வந்து இப்படிச் சொன்னாள்' என்று சொல்லவும்; பரமசிவன் 'நீ பயப்படாதே; கங்கைநீரானது சிந்திப்போகாதபடி நாம் காப்பாற்றுவோம்' என்று சொல்லிப்போகவும், மறுபடியும் இரண்டாயிரத்தைந்நூறுவருஷம் தவஞ்செய்கிறான்.

"காந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா
அரந்தை யுற்றவன் இரண்டரை யாயிரம் ஆண்டு
புரிந்து நற்றவம் பொலிதர வரைமகள் புனிதன்"

"எதிர்ந்து நின்றினை வென்னென இறைஞ்சிஎம் பெரும
அதிர்ந்து கங்கையீ தறைந்தனள் என்றலும் அஞ்சேல்
பிதிர்ந்தி டாவகை காத்துமென் றேகிய பின்றை
முதிர்ந்த மாதவம் இரண்டரை யாயிரம் முடித்தான்"

[பால. அகலிகை. 52, 53.]

அதன்பின்பு, பெருகுகிற நீரையும் சாம்பலையும், காற்றையும், விளங்குகின்ற உலர்ந்த இலைகளையும், சூரியனுடைய பிரகாசம் பொருந்திய கிரணத்தையும் முதலில் உண்டுவந்து; அதன்பிறகு, அவற்றையும்கூட உண்ணுமல் முப்பதிறுயிரம் வருஷம் மிக்க அன்புடனே பகீரதன் அருமையான தவத்தைச் செய்துவந்தான்.

> "பெருகு நீரொடு பூதியும் வாயுவும் பிறங்கு
> சருகும் வெங்கதிர் ஒளியையும் துய்த்துமற் றதையும்
> பருக லின்றியும் முப்பதி ஞயிரம் பருவம்
> முருகு காதலின் மன்னவன் அருந்தவம் முயன்முன்"
>
> [பால—அகலிகை—54.]

அதன்பிறகு கங்கை தோன்றினுள், சிவனுடைய தலையிலே குதித்தாள்: என்று கதை செல்லுகிறது.

பகீரதன் தவம்செய்த வருஷங்களைச் சற்றே பார்ப்போம். முதலிலே பிரமனைக்குறித்துப் பதினுயிரம் வருஷம், பிறகு சிவனைக் குறித்து பதினுயிரம் வருஷம், பிறகு கங்கையைக்குறித்து ஐயாயிரம் வருஷம், பிறகு மீண்டும் சிவனைக்குறித்து இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷம், அது முடிவுபெற மீண்டும் ஓர் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷம், பிறகு கங்கையைக்குறித்து முப்பதினுயிரம் வருஷம்: இப்படியாக மொத்தம் அவன் தவம் புரிந்த காலம் அறுபதினுயிரம் வருஷம். முன்னுல் காட்டிய இடங்களிலே நேராக அறுபதினுயிம் என்றும், சற்றே கொச்சையாக அறுவதினுயிரம் என்றும், வேறுவகையாக ஆறயுதர் என்றும், பெருக்கல்வாய்பாடு மூலமாக முப்பதிற்றிரட்டிகொண்ட ஆயிரம், மூன்றுபத்தாயிரத்திரட்டி, ஆறுபத்தாயிரம் என்றும் குறிப்பிட்ட கம்பர், இப்பொழுது ஒரு கூட்டல் கணக்குப்போட்டு அறுபதினுயிரம் என்று தெரிவிக்கிறுர்.

வால்மீகி உறுதியாய்த் தொகை குறிப்பிடாத பகீரதனுடைய தவத்தின் கால எல்லையைக் கம்பர் வரையிட்டு அறுபதினுயிரம் என்று நிச்சயித்திருக்கிறுர். பகீரதனுடைய பிரயத்தினத்தின் மகிமை எவ்வளவோ அத்துணை மகிமை அறுபதினுயிரத்துக்கும் உண்டுபோலும்!

கம்பராமாயணசாரம்.

[உருச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

48 பூதநா யகனீர் சூழ்ந்த புவிக்குநா யகனப் பூ[1]மேல்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகனீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன்றன் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றம் சொல்லிய வந்தே[2] னென்றான்.

கொண்டுகூட்டு: *'பூதநாயகன், நீர்சூழ்ந்த புவிக்குநாயகன், அப்பூமேல் சீதைநாயகன், வேறு உள்ள தெய்வநாயகன், நீ செப்பும் வேதநாயகன், மேல்நின்ற விதிக்குநாயகன் விட்ட தூதன் யான். (அவன்) பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்' என்றான்.*

பொருள். *'(பஞ்ச) பூதங்களுக்குத் தலைவனும் (அப்பூதங்களினாலாகிய) பூமிக்கு நாயகனும் (அந்தப்) பூமிமேல் (சனகன் யாகபூமியை உழுதபோது படைச்சாலிலே பூமிதேவியின்மகளாகத் தோன்றிய) சீதாதேவிக்கு நாயகனும் (தானும் சீதாதேவியுமாகிய தெய்வங்களல்லாது) வேறுள்ள (சாமானிய) தெய்வங்களுக்கெல்லாம் தலைவனும் நீ ஓதுகின்ற வேதங்களின் (பொருளாயுள்ள) நாயகனும் (தெய்வங்களும் விதிவசத்தனவாதலின், அத்தெய்வங்களுக்கும்) மேலாகிநின்ற விதிக்குக் கர்த்தாவுமானவனுடைய தூதன்யான். அவன் உன்னிடம் சொல்லும்படி கட்டளையிட்ட வார்த்தைகளைச்சொல்லவந்தேன்.' என்று (அங்கதன்) சொன்னான்.*

நீர் - கடல். பூ - பூமி. பணித்த - கட்டளையிட்ட. மாற்றம் - சொல். சொல்லிய - சொல்லும்படி. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

சீதைநாயகன் என்ற தொடர், கேவலம் எதுகை நிரப்புவதாயில்லாமல், ஒரு குறித்த கருத்துடன் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. அத்தொடரின்றேல், இங்கே அங்கதன்கூறிய விசேடணங்கள் யாவும், இராமனையேயன்றி வேறு பெருமகனெவனையும் உபசரித்துக் கூறியனவாகலாம். அவ்வாறாகாது; இராமனைத் தெளிவாகச் சுட்டுதற்பொருட்டுச் சீதைநாயகன் என்றானென்பது கவனிக்கத்தக்கது.

பாடபேதம்: [1] *இப்பூ.* [2] *வந்தது.*

49 அரன்கோலா மரிகோ லாமற் றயன்கோலா மென்பா ரன்றிக்[1]
குரங்கெலாங் கூட்டி[2] வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவா னாகி லின்ன மறிதியென் றன்னை யேவும்
நரன்கோலா மூலக[3] நாத னென்றுகொண் டரக்க னக்கான்.

கொண்டுகூட்டு: 'அரன்கொலாம், அரிகொலாம், மற்று அயன்கொலாம், என்பாரன்றி,—குரங்கெலாங் கூட்டி வேலைக்குட்டத்தைச் சேதுகட்டி, 'இன்னம் இரங்குவானாகில், அறிதி' என்று உன்னை ஏவும் நரன்கொலாம் உலகநாதன்' என்று அரக்கன் நக்கான்.

பொருள்: '(ஒவ்வொருவரும் உலகநாதன் என வழங்கப்படுகின்ற திரிமூர்த்திகளாகிய) சிவன், திருமால் பிரமனென்பா (ருள் யாவராயினும் ஒருவ) ரன்றி,— (படைக்கு மனிதர்கிடையாமல்) குரங்குகளையெல்லாம் (படையாகக்) கூட்டி (இராக்கதர் நடந்து கடக்கும் சிறு) கடற்குட்டத்தை அணைகட்டி (க் கடந்துவந்து, "இராவணேசுரன் முன் இரங்கவில்லையாயினும்) இப்போதாவது இரங்குவானானால், (அதனை) அறிவாயாக" வென்று உன்னை ஏவிய (கேவலம்) மனிதனாயுள்ளவனா, உலகநாதனாவான்': என்று (பரிகசித்துச்) சிரித்தான்.

சேது - அணை. இன்னம்—இன்னும்—இவ்வளவுகாலஞ்சென்றும் (தமிழகராதி). அறிதி - அறிவாய்.

முதலடியில், 'கொல், 'ஆம்', என்பவையெல்லாம் அசைநிலைகள் (Expletives). நான்காம் அடியில் உள்ள 'கொல்', ஐயப் பொருளில்வந்த இடைச்சொல். ஆம் இகழ்ச்சிக்குறிப்பு (தமிழ் அகராதி).

'சிவபெருமானோ? (அன்றித்) திருமாலோ? (அன்றி முன்னையவரினும்) வேறான பிரமன்தானோ? என்று (உலகத்தில் முதற்கடவுளராக) வழங்கப் படுகின்ற இவர்களன்றி' என்று முதலடிக்குப் பொருள்கூறுவதுண்டு.

உலகநாதன், திரிமூர்த்திகளென்ற முதன்மையுடைய மூத்தேவருள் ஒருவனன்று; திக்குப்பாலகனுமன்று, தேவருளொருவனுமன்று, சதுரங்கப் படையுடைய தலைவரு ளொருவனுமன்று, படைக்கு மனிதர்கிடையாமல் குரங்குகளைப் படையாகக்கொண்ட பஞ்சைமனிதன உலகநாதன், என்று கூறினையே! உன் மடமை இருந்தவாறென்னே!! என்று பரிகசித்து இராவணன் சிரித்தா னென்க.

பாடபேதம்: [1] என்பதன்றி, என்பதொன்ற. [2] கூடி, கொண்டு, காட்டி. [3] உலகின்.

இராவணன் அங்கதனை 'நீ யார்' என வினவல்.

['சிவ விட்டுணுக்களே, இந்நகரை அணுக அஞ்சுவார்கள். அப்படியிருக்க, ஒரு மனிதனுக்காக இங்கே அஞ்சாதுவந்த நீ யார்? சொல்' என்று இராவணன் கேட்டான்.]

அங்கதன் தன்னைத் தெரிவித்தல்.

50 இந்திரன் செம்மல் பண்டோ ரிராவண னென்பான் றன்னைச்[1]
சுந்தரத் தோள்க ளோடும்[2] வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிக டாவித் திரிந்தனன் றேவ ருண்ண[3]
மந்தரப் பொருப்பால்[4] வேலை கலக்கினான் மைந்த னென்றான்.

கொண்டுகூட்டு: 'ஓர் இராவணன் என்பான்தன்னைப் பண்டு வாலிடைத்தூங்கத் தோள்களோடு சுற்றிச் சிந்துரக்கிரிகள் தாவித்திரிந்தனன், தேவர் உண்ண, மந்தரப்பொருப்பால், வேலை(யைக்) கலக்கினான், இந்திரன் செம்மல் (ஆன வாலிக்கு நான்) மைந்தன்' என்றான்.

பொருள்: ('எவனோ) ஒருவன் இராவணனென்று (பேர்) சொல்லப்பட்டவ(னும். அவ)னை முன்காலத்திலே, தன் வாலினிடத்தே தொங்கும்படி (அவ்வாலினால் அவன்) தோள்களைச்சுற்றி(க் கட்டிக்கொண்டு, அநாயாசமாக,) மலைகளிலே தாவித்திரிந்தவனும் தேவர்கள் உண்ண (அமுதம் உண்டாவதற்காக) மந்தரமலையினாலே (பாற்)கடலைக் கடைந்தவனுமான இந்திரகுமார(ன் வாலியி)னுடைய மகன் யான்' என்று (அங்கதன் விடை)கூறினான்.

செம்மல் - மகன். சிந்துரக்கிரி - யானைகளையுடைய மலை. பொருப்பு - மலை. வேலை - கடல்.

அங்கதன், இராவணனுடைய கருவத்தை அடக்கக்கருதி, அதி பிரசித்தனான அவன், அப்பிரசித்தனாகத் தோன்றும்படி, அவனைப் பண்டு ஓர் இராவணன் என்பான் எனச் சுட்டித் தாழ்த்தியசாமர்த்தியம் கவனிக்கத்தக்கது.

பாடபேதம்: 1 என்கின் றானைச். 2 தோள்க டோறும், தோளி னோடும், புயங்களோடும். 3 தேவர்க்குத் திரிக்க வொண்ணு, திரிந்தனன் றேவர்க் குண்ண. 4 மந்தரக் கிரியால்.

இராவணன், அங்கதனைத் தன்வசப்படுத்த முயலல்.

['நீ வாலிமகனா! நன்று! நன்று! உன்தந்தை என் நண்பன். அதற்கு அக்காட்சியுண்டு. நாங்கள் அக்கினிசாட்சியாகச் சிநேகஞ்செய்துகொண்டோம். நீ இராமதூதனானது, நிந்தனைக்கிடமானது. அதனை விட்டுவிடு. நீ தாமதியாமல் என்னிடம் வந்தது நல்லதாயிற்று. என்மைந்தனே, உனக்கு (இறந்த உன்தந்தை தரற்பாலதாகிய) வானரராச்சியத்தை யான் தந்தேன். பெற்றுக்கொள்']

51 தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந் திருகை நாற்றிப்
பேதைய[1] னென்ன வாழ்ந்தா[2] னென்பதோர் பிழையுந் தீர்ந்தாய்[3]

சீதையைப் பெற்றே னுன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன்
[4]ஏதெனக் கரிய தென்று [5]னிறுதியி னெல்லை கண்டான்.

கொண்டுகூட்டு: இறுதியின் எல்லைகண்டான், 'தாதையைக் கொன் றான்பின்னே இருகை தலைசுமந்து நாற்றிப் பேதையன் என்ன வாழ்ந்தான் என்பதோர் பிழையும் தீர்ந்தாய் (ஆவாய்); சீதையைப் பெற்றேன், உன்னைச் சிறுவனாகவும் பெற்றேன்: ஏது எனக்கு அரியது.' என்றான்.

பொருள்: விரைவிற் சாவானான இராவணன், நீ, இராம னுடைய தூதனாயிருப்பதைவிட்டு யான்கொடுக்கும் வானரத் தலைமையைப் பெறுவாயானால் '(அங்கதன் தன்)பிதாவைக்கொன்ற (பகை)வன்பின்னே (வணக்கக்குறியாக) இரண்டுகைகளையும் தலைமேல் (கூப்பிச்) சுமந்து (முகங்கவிழ்ந்து அந்தத்) தலையைத் (தாழ்த்தித்) தொங்கப்போட்டுக்கொண்டு (போவதைக் கண்டோர், இப்படிச் செய்யும் இவன்) அறிவிலியென்று சொல்லும்படி வாழ்ந் தான்' என்ற (பழிப்புக்காளான) குற்றம் நீங்கப்பெற்றாயாவாய். சீதையை அடைந்தேனாகவுள்ள யான், உன்னைப் பிள்ளையாகப் பெற்றவனுமாவேன். (இவ்விருபெரும்பேறுகள்பெற்ற) எனக்கு அருமையானது யாது? (ஒன்றுமில்லை.)

தாதை - தந்தை. பேதை - அறிவிலி. தீர்தல் - நீங்குதல். இறுதி - முடிவு - மரணம்.

இருகை(களையும்) தலை(மேற்) சுமந்து (அந்தத் தலையை) நாற்றி என இயைத்துக்கொள்க.

'இராவணன் இறப்பது தேற்றமாதல்பற்றி, "இறுதியினெல்லைகாண் பான்" என்ன வேண்டிய இடத்து "இறுதியினெல்லைகண்டான்" என்றது, தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்ட காலவழுவமைதி: தீர்ந்தாய் என்ற இடத்திலும் இவ்வாறே: வை. மு. கோ.

பாடபேதம்: [1] பேதையர். [2] வாழ்ந்தாய். [3] தீர்ப்பாய். [4] யாது இறுதினாற்கு.

['அந்த மனிதர்கள் இன்று அல்லது நாளை யிறந்துவிடுவது நிச்சயம். உன் அரசை உனக்குக் கொடுத்தேன். ஊழிகாலம் ஆளுவாயாக. உன்னைச் சிங்காதனத்தின்மீது ஏற்றித் தேவர்களெல் லாம் துதிக்காநிற்க,நானே உனக்கு மகுடஞ்சூட்டுவேன்.' என்றான்.]

அங்கதன் இராவணன்கூறியதற் கெதிர் கூறல்.

[இராவணன்கூறியதைக்கேட்ட அங்கதன், கைகொட்டிச் சிரித்து, இங்குள்ளவரெல்லாரும் இறப்பாரென்று தெரிந்து உன் தம்பி விபீடணன் எங்களை யடைந்திருக்கின்றான்.]

52 வாய்தரத் தக்க சொல்லி யென்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந் தரச[1] தாள்கை
நீதரக் கொள்வேன் யானே[2] யிதற்கினி நிகர்வே றெண்ணில்[3]
நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லர சென்று நக்கான்.

கொண்டுகூட்டு: 'வாய்தரத்தக்க சொல்லி, என்னை உன்வசம் செய்வாயேல், தூது (ஆக) வந்து அரசதாள்கை ஆய்தரத்தக்கதன்றோ? நீ தர யான் கொள்வேனே! இதற்கு இனி நிகர் வேறு எண்ணில், நல்லரசை நாய் தரச் சீயம் கொள்ளும்' என்று (அங்கதன்) நக்கான்.

பொருள்: '(நீ நினைத்தகாரியம்) சித்திக்கும்படி (அதற்குத்) தக்கவை(களான வார்த்தை)களைச் சொல்லி (என்னை ஏமாற்றி) உன்வசப்படுத்திவிடுவாயானால், (நான் அரசனாவேன்.) தூது(த் தொழிலைச் செய்ய) வந்து, (அதைச் செய்யாமல்,) அரசாட்சி(த் தொழில்) செய்தல், (தக்கதோ அன்றோ என்பது) ஆராய்தற்குரியதன்றோ? (ஆராய்ந்து தக்கதென முடிவுசெய்தாலும், அரசாட்சியை, மிகத் தாழ்ந்த) நீ கொடுக்க (மிகஉயர்ந்த) நான் வாங்குவேனோ? இதற்கு (-அரசை நீ கொடுக்க நான் வாங்குதற்கு, முழுப்பொருத்தமான) உவமை [இதுவே (-அரசை நீ கொடுக்க நான் வாங்குதலே) குறைந்த பொருத்தமான உவமை,] வேறு (யாது என) ஆராய்ந்து பார்த்தால், (அது,) அரசை நாய்கொடுக்கச் சிங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பதாம்' என்று சொல்லிச் சிரித்தான்.

வாய்தரல் - வாய்தருதல் - வாய்தல் - சித்தித்தல். ஆய்தரல் - ஆய்தருதல் - ஆய்தல் - ஆராய்தல். தரு, துணைவினை. அரசது - அரசு. அது, பகுதிப்பொருள்விகுதி. நீதர, யான் கொள்வேனே என ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. இந்த ஏகாரம் எதிர்மறைப்பொருட்டு. இதற்கு (இதுவே நிகர்) இனி(மேல்) நிகர் (-உவமை) வேறு எண்ணி(னால்). சீயம் - சிங்கம். நகுதல் - சிரித்தல்; நக்கான் - சிரித்தான். வாய்தரத்தக்கசொல்லி யென்பதற்கு வாயில்வந்தவையெல்லாஞ்சொல்லி என்று பொருள்கூறலும் உண்டு.

வாலியின் வாலில் ஒரு பூச்சிபோலக் கட்டித் தொங்கவிடப்பட்டு உழன்ற அற்பன், வானராதிபத்தியத்தை அளிப்பானும்! அந்த வாலியின்

மகன் வாங்குவானும்! இது, மிருகாதிபத்தியத்தை நாய் கொடுக்கச் சிங்கம் வாங்குவதுபோலுமென்ற கருத்துப்பட அங்கதன் தன் பெருமை மிகுதியும் இராவணன் சிறுமைமிகுதியும் விளங்கக் கூறினனென்க.

பாடபேதம்: [1]அரசை. [2]கொள்வன் யானே. [3]ஒரு நிகரு முண்டோ, இனி நிகர்வே றுண்டோ.

இர்ராவணன், கோபித்து, 'வந்த காரியத்தைக் கூறு' எனல்.

[இராவணன், அங்கதன் கூறியதைக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டு, அவனைக் கொல்ல எண்ணி, அந்த எண்ணத்தை, குரங்கைக் கொல்லல் தன் பெருமைக்குக் குறைவாமென்று மாற்றி 'நீ வந்த காரியத்தைச் சொல்' என்றான்.]

அங்கதன் இராமன் கூறியதைத் தெரிவித்தல்.

53 கூவியின் றென்னை நீபோய்த் தன்குலம் முழுதுங் கொல்லும்
பாவியை யமருங் கஞ்சி[1] யாண்புக்குப்[2] பதுங்கி னானைத்[3]
தேவியை விடுக வன்றேற் செருக்களத் தெதிர்ந்து தன்னின்[4]
ஆவியை விடுக[5] வென்றா னருளினம்[6] விடுகி லாதான்.

கொண்டுகூட்டு: '(உன்மீது) இ(ன்)னம் அருள்விடுகிலாதான், இன்று என்னைக் கூவி, தன்குலம் முழுதும் கொல்லும் பாவியை, அமருக்கு அஞ்சி அரண்புக்குப் பதுங்கினனை நீ போய்(ப் பார்த்துத்) "தேவியை விடுக, அன்றேல் செருக்களத்து எதிர்ந்து தன் இன் ஆவியை விடுக" (என்று சொல்)' என்றான்.

பொருள்: '(நீ, தனக்கு மிக்க பெருந் தீங்கிழைத்தவனாயிருந்தும், உன்னிடத்து) இன்னமும் கருணைநீங்காத இராமபிரான், இன்று என்னை அழைத்து, "தன் குலமுழுவதையும் அழியச்செய்யும் பாவியும் போருக்குப் பயந்து கோட்டைக்குட் புகுந்து பதுங்கியிருப்பவனுமான இராவணனிடம் சென்று, சீதாதேவியை(ச்சிறையினின்றும்) விட்டிடுக, விடாயெனில், போர்க்களத்தில் எதிர்த்து நின்று (போர்செய்து) உயிரை விட்டிடுக" (என்று கூறு)' என்றான்.

அமர் - செரு - போர். அரண் - கோட்டை. புக்கு - புகுந்து.

'இராவணன் சீதையைக் கவர்ந்துசென்றது, அரக்கர்குலமெல்லாம் அழிந்துபோவதற்குக் காரணமென்பான் "தன்குல முழுதும் கொல்லும் பாவி" என்றான்': வை. மு. கோ.

அங்கதன் சொல்லக்குறித்ததுமுழுவதும், 'ஆவியைவிடுக' என்றான்' என்றதனோடு முடிந்துவிட, குறையடியை நிறைவிக்கக்

கூறிய 'அருளினம் விடுகிலாதான்' என்ற அருமைவிசேடணம், இராமனுடைய எல்லைகடந்த பொறுமையையும் அளவற்ற கருணையையும் மிக நயமாக விசேடித்து விளங்கச்செய்தல், கவனிக்கத் தக்கது. 'என்ருன்' என்பதற்குமுன் 'என்றுசொல்' என்பதை வருவித்து 'என்றுசொல் என்ருன்' என்று பொருள்கூறப்பட்டிருப்பது காண்க.

பாடபேதம்: [1] எய்தி. [2] புகப். [3] பதுங்கி ஞனென், பதுங்குவானை. செருப்புறத் தெதிரேவந்தன்; செருக்களத் தெதிர்ந்து தன்கண். [5] விடுக்க. [6] அருளினை.

54 பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாட் படைஞ ரோடும்[1]
மருந்தினு மினிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை[2] மூக்கும்வெம் முலையு மெம்பி[3]
அரிந்தநாள்[4] வந்தி லாதா னினிச்செயு மாண்மை யுண்டோ[5]

கொண்டுகூட்டு: "பாட்டியாக்கையைப் படுத்தநாள், மருந்தினும் இனிய மாமன் படைஞரோடும் மடிந்தநாள், (நான்) வனத்துள்வைகி இருந்துழிவந்த தங்கை மூக்கும் வெம்முலையும் எம்பி அரிந்தநாள் (போர்செய்ய) வந்திலாதான் இனிச்செய்யும ஆண்மை உண்டோ?"

பொருள்: (காலக்கிரமத்தில், முதலாவதாக "காட்டில் விசுவாமித்திரமுனியையும் என்னையும் எதிர்த்த தன்)பாட்டி (தாடகை)யின் உடலைப் பருந்துகளருந்தும்படி (யான்) வீழ்த்தியகாலத்தும்,

(இரண்டாவதாக,) தன்மாமன் (சுபாகு விசுவாமித்திரன் வேள்வியைக் கெடுக்கவந்தபோது, அவன் கூடவந்த) படைவீரர்களோடு (என்னுற் கொல்லப்பட்டு) மடிந்த காலத்தும்,

(மூன்ருவதாக, யான்) காட்டில் தங்கியிருந்த (பஞ்சவடியென்ற) இடத்தில், வந்த தன்தங்கை (சூர்ப்பநகை)யின் மூக்கையும் தனத்தையும் என்தம்பி (இலக்குமணன்) அரிந்த காலத்தும் (போர்செய்ய) வராதவன் இனிச்செய்யும் ஆண்மை உண்டோ?"

யாக்கை - உடல். படுத்தல் - அழித்தல்; வீழ்த்தல். படைஞர் - படைவீரர். மருந்து - தேவாமிர்தம், உழி - இடம். இருந்துழி - இருந்தஉழி - இருந்த (பஞ்சவடியென்ற) இடத்தில்.

பின்பு கொல்லப்பட்ட மாமன் படைஞரோடு கொல்லப்பட்டான் என்றது, முன்பு கொல்லப்பட்ட தாடகை தனியே வந்து போர்செய்து மடிந்தாளென்பதைக் குறிப்பித்தல் காண்க.

பாடபேதம்: [1] பகைஞரோடும். [2] வந்த நங்கை, தங்கை மூக்கும். [3] இருஞ்செவி மூலயி னேடும். [4] அரிந்துழி. [5] ஆண்டொழி லழகிதென்ருன், ஆண்டொழி லழகிதம்மா, இனிவரற் கையமுண்டோ.

[(நான்காவதாக,) '"பயிர்களுக்குக் களைகள்போல, உயிர்களுக்குக் களைகளாயிருந்த கரன் முதலிய தன் தம்பிமார், சுற்றத்தாருடனும் படைகளோடும் (பஞ்சவடியில்) என்ஞல் வேரோடு அழிக்கப்பட்டகாலத்தும்,

(ஐந்தாவதாக,) என்னையும் இலக்குமணனையும் வஞ்சகத்திஞல் சீதையைவிட்டுப் பிரியச்செய்து, அவளைக் கவராமல், எங்களை வென்று அவளை அடைதலே வீரச்செயலென்று போருக்குவரவேண்டியகாலத்தும்,

(ஆருவதாக,) சீதையைக் கண்டு, தன்னை எதிர்த்த இராக்கதரனைவரையும் கொன்று, தன் மகன் அட்சகுமாரனைச் சாந்துபோலாம்படி தரையிலே தேய்த்து, தன் ஊரை எரிக்கிரையாகக் கொளுத்திவிட்டு, தன் கண்காணக் கடலைத் தாண்டிவந்த அனுமானைத் தொடர்ந்துவந்து போர்புரியவேண்டியகாலத்தும்,

(ஏழாவதாக,) தன் தம்பி விபீடணன் சரணமடைய, தன்னை (இராவணனை) வென்றுவிடும் துணிவிஞல் தான் இருக்கும்போதே இலங்கையரசஞக அவனுக்கு (விபீடணனுக்கு) முடிசூட்டி, கடலைக்கடந்து அந்த இலங்கையை அடைந்து கைப்பற்றி அவனுக்குக் கொடுத்தற்குச் சேதுபந்தனஞ்செய்தகாலத்தும்,

(எட்டாவதாக,) தன்ஞற் சிறைப்படுத்தப்பட்டிருக்கிற தேவரும் தேவமாதரும் காண, நேற்று, தன்முடிமணிகளைப்பறித்த சுக்கிரீவனைத் தொடர்ந்துவந்து போர்புரியவேண்டிய காலத்தும்,

(ஒன்பதாவதாக,) இன்று வானரப்படை இலங்கையை வளைந்த காலத்தும் எதிர்த்துவராதவனுக்குப் போர்புரியும் ஆண்மை உண்டோ?" என்று சொல்லி வா: என்று இராமபிரான் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்ருன். நீ செய்யக்கடவன இரண்டு. ஒன்று, சீதாதேவியை இராமபிரானிடம் கொண்டுவந்துவிட்டுச் சரணமடைதல்: மற்ரென்று, எதிர்த்துப் போர்புரிந்து மரணமடைதல்: ஏதேனும் இரண்டில் ஒன்று செய்தற்குப் பதுங்கியிருக்கும் கோட்டையை விட்டு வெளியே வருவாயாக' என்ருன்.]

55 நீரிலே பட்ட[1] சூழ்ந்த நெருப்பிலே பட்ட நீண்ட
பாரிலே பட்ட வானப் பரப்பிலே பட்ட வெல்லாம்[2]
போரிலே பட்டு வீழப் பொருதநீ ஒளித்துப் புக்குன்
ஊரிலே பட்டா யென்றால்[3] பழியென[4] வுளையச் சொன்னான்.

கொண்டுகூட்டு: *'போரிலே,—நீரிலே பட்ட, சூழ்ந்த நெருப்பிலே பட்ட, நீண்ட பாரிலே பட்ட, வானப்பரப்பிலே பட்ட (ஆகிய) எல்லாம் பட்டு வீழப் பொருத நீ ஊரிலே ஒளித்துப் புக்கு, (அங்கே) பட்டாயென்றால், பழியென, உளையச் சொன்னான்.*

பொருள்: *'(நீ முற்காலத்திலே, உன் ஊரைவிட்டு, வீரனாக வெளியேசென்று திக்குவிசயம் செய்த) போர்களிலே, (வருணதேவனும் அக்கினிதேவனும் பூவுலகத்தரசரும் தேவராசனும், முறையே அவர்களுக்குரிய) வருணலோகப்பொருள்களும் அக்கினிலோகப்பொருள்களும் பூலோகப்பொருள்களும் தேவலோகப் பொருள்களும் (ஆகிய) எல்லாப் பொருள்களும் அழிந்தொழியப் பொருத(தனால், புகழுடம்பு படைத்த) நீ (இக்காலத்திலே, பேடியாக) உன் ஊர்க்கோட்டைக்குள்ளே ஒளித்துப்புகுந்து உன் ஊரிலே கொல்லப்பட்டாயானால், (பூத உடம்போடு புகழுடம்பும் நிலையாமல் மாண்டொழியப்) பழி (உடம்பை நிலையாக அடைவாய்)' என்று (இராவணன் மனம்) வருந்தும்படி (அங்கதன்) சொன்னான்.*

நீர் - கடல். படுதல் - உண்டாதல். நீரிலே பட்டன எல்லாம் - (கடல் படுதிரவியங்கள் எனப்பட்ட) கடலிலே உண்டாகிய பொருள்களெல்லாம். நீர் - கடல். கடலுக்கு இறைவனாகிய வருணனுலகுக்கு ஆகுபெயர். நெருப்பு, அக்கினிதேவனுலோகத்துக்கு ஆகுபெயர். சூழ்ந்த நெருப்பு - (வணங்குவார் வலமாகச்) சுற்றப்பெற்ற அக்கினிதேவன். வானப்பரப்பு, தேவலோகத்தைக் குறித்தது. படுதல் - அழிதல். (தமிழ் அகராதி.) வீழ்தல் - கெடுதல் (தமிழ் அகராதி.) பட்டுவீழ - அழிந்தொழிய. பொருதல் - போர்செய்தல். புக்கு - புகுந்து. உளைய - மனம்வருந்த.

'போரில்' என்பதற்கு 'யுத்தகளத்தி'லென்றும், 'பட்ட' என்பதற்குத் 'தோன்றிய பிராணி' என்றும், 'எல்லாம்' என்பதற்கு 'எல்லாப் பிராணிகளும்' என்றும் பொருள்கூறுவதுண்டு.

பாடபேதம்: [1] பட்டு. [2] பட்ட தெல்லாம். [3] பட்டவென்றால். [4] என்பது.

அங்கதன் திரும்பி இராமனை அடைதல்.

[மேற்கூறிய, வெட்கப்படச்செய்யும் வார்த்தைகளைக்கேட்ட இராவணன், உலகத்துள்ள எல்லா உயிர்களையும் உண்டு விடுவானோ வென்றெண்ணும்படியான கோபங்கொண்டு 'இவனைப் பிடித்துப் பூமியில் மோதிக் கொல்லுங்கள்' என்று பக்கத்தில் நின்ற நான்கு இராக்கத கிங்கரரை யேவினான். ஏவலின்படி, தன்னைப் பற்றியவர்களை அங்கதன் தூக்கிக்கொண்டு உயரப் பாய்ந்து, அவர்களைத் தலை அறுபடச்செய்து, கோபுரவாயிலிலே யெறிந்து, அங்குள்ளாரை விளித்து, 'போர் நிகழப்போகிறது. மின்னல் போல ஒளிவிடும் இராமபாணங்கள் தாக்குமுன், வலியற்ற நீங்களெல்லீரும் ஓடிப்போங்கள்' என்று சொல்லிப்போய், சந்திரன் விண்ணினின்று மண்ணில் இறங்கியதுபோல இராமனையடைந்து அடிவணங்கினான்.]

இராமன், இராவணன்கருத்து யாதென அங்கதன் கூறுதல்.

56 உற்ற போதவ னுள்ளக் கருத்தெலாம்
கொற்ற வீர னுணர்த்தென்று கூறலும்[1]
[2]முற்ற வோதியென் மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி யாசை யறானென்றான்.[3]

கொண்டுகூட்டு: (அங்கதன்) உற்றபோது, கொற்றவீரன், 'அவன் உள்ளக்கருத்தெலாம் உணர்த்து' என்று கூறலும், 'முற்ற ஓதி என்? மூர்க்கன், முடித்தலை அற்றபோதன்றி ஆசை அறான்' என்றான்.

பொருள்: அங்கதன் வந்துசேர்ந்தபோது, இராமன், 'அவன் (இராவணன்) உள்ளத்திலுள்ள எண்ணங்களெல்லாவற்றையும் தெரிவி' என்று கூறினவுடனே, அங்கதன் 'அவன் கருத்து முழுவதையும் சொல்லி யென்னபயன்? அந்தப் பிடிவாதக்காரன், கிரீடமணிந்த தலைகளற்றாலன்றி (சீதைமீதுகொண்ட) ஆசை அறமாட்டான்' என்று கூறினான்.

கொற்றம் - வெற்றி. மூர்க்கன் - பிடிவாதக்காரன்.

பாடபேதம்: [1] உரையென்று. [2] முற்றும். [3] அறுதென்றான்.

அங்கதன் தூதுப்படலம் முற்றிற்று.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

பழனிக்கோவை.

[உகூ௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

உக. பகைதணித்தல்.

22 பிரிவு கூறல் வருத்தந் தணித்த
விருபகை தணித்தற் கேக லென்ப.

1. பிரிவுகூறல்.

படையெடுத் துப்பொரும் வேந்த ரிருவர் பகையடங்க
விடைதடுத் துச்சமஞ் செய்தல்சென் றூர்நமர் யாறடங்கச்
சடைதடுத் தோர்தருஞ் செவ்வேள்வை யாபுரித் தையனல்லாய்
குடைதடுத் தேகொடிப் போர்மாற் றுஞ் சேனைக் குழாத்தொடுமே.

இகலினரிருவர் பகைதணித்தற்கு
நீங்கியோன்பிரிவு பாங்கிசெப்பியது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—பகைதணி வினையிடைப் பிரிவுணர்த்துதல்.

2. வருத்தந்தணித்தல்.

உடுவின் புதல்வர் பழனிநல் லாய்சென்ற தூண்மையல்ல
அடுவன் பதத்துக் குளப்பாகு போற்கரைந் தாகுலியேல்
கடுவன் மடற்றெங் கொளித்த தன் காய்சிந்தக் கல்லென்சொல்லான்
மடுவின்கண் வீழ்ந்திள மந்தியுந் தேர்பணை வாழ்க்கையரே. (315)

இகல்வேன்மன்ன ரகலார்தணந்தது
மில்லையென்ன மெல்லியற்குரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளை யாற்றுவித்தல்.

பகைதணித்தற்குப் பிரிவு முற்றும்.

உஉ. வேந்தர்க் குற்றுழிப் பிரிவு.

23 பிரிந்தமை கூறல் பிரிவாற் றாமை
கார்மிசை வைத்தல் காரை நோக்கி
வருந்தி யுரைத்தல் மலர்க்குழ லரிவை
கூதிர்குளிர் பின்பனிக் கவன்றுகூறல்

பின்பனிக் கிரங்கி யுரைத்த விளவேனில்
கண்டவ ளின்ன லெய்த லிதுவவர்
குறித்த பருவ மெனவரவு கூறல்
பருவமறைத் துரைத்தல் மறுத்துரைத் தலொடு
தேர்வரவு கூறல் வினைமுற்றி நினைத்தல்
நிலைமைநினைந் துரைத்தன் முகிலொடு கூறல்
வரவெடுத் துரைத்தன் மறவாமை கூறல்
மற்றிவை யீரெட்டு முற்றுழிப் பிரிவாம்.

1. பிரிந்தமைகூறல்.

பொன்னா மார்பிற் றிகிரிகொண் டோனைப் பொருதரிக்கு
முன்னாழி யீதற் குரியார் பழனியின் மும்மதிள்மேல்
அன்னா ளரன்சென்ற தாகவெம் பாசறைக் கன்பர்சென்று
றொன்னார்க ளுலங்க மோரங்க மாக்கவென் றொண்ணுதலே. (316)

வெம்முனைவேலவன் றெம்முனைமேற்செலல்
